திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நடைபெறக்கூடிய திட்டங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். இப்போது அங்கு தண்ணீர் பற்றாக் குறை அதிக அளவில் இருக்கிற காரணத்தால், பெரிய பெரிய ராணுவ டேங்குகளின் மூலமாக தண்ணீரை வரவழைத்து அந்தப் பகுதி மக்களின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்லி, தண்ணீர் வேண்டும் என்று முறையீடு வந்தால் அந்த முறையீட்டை கவனித்து விநியோகம் செய்யப்படும்.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை முறைப்படுத்தும் சட்டம்.

*வினா எண். 842— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டின் 31 வது கூட்டத் தொடரில் கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வேலை நிலைமைகள், சம்பளம் பற்றி ஒழுங்கு முறைப்படுத்தும் ஒரு சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சட்டத்தின் பிரதான அம்சங்கள் என்ன? எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சட்டத்தின் முக்கிய சிறப்பியல்புகள் அடங்கிய * விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்படுள்ளது.

எப்பொழுது சட்டம் கொண்டுவரப்படும் என்பதற்கு தகவல் இல்லை.

---

* 672-674 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1981 ஏப்ரல் 22]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்ட அறிக்கையினை அவையில் வைத்திருக்கிறார்கள். அதில் இருக்கிற முதல் பாராவிலே 10 அல்லது 20 தொழிலாளர்கள் நான் பவர் அல்லது பவர்என்ற முறையில் 10 அல்லது 20-க்கும் மேற்பட்டவர்கள் கொண்ட பொறியியல் கட்டுமான நிறுவனங்கள் இச்சட்டத்தில் அடங்கும் என குறிப்பிடப்பட்டு உள்ளது. அப்படியானால் ஒரு நிறுவனத்தில் வேலை செய்யாத கட்டிடத் தொழிலாளர்கள்—அவர்கள்தான் இன்றைக்கு அதிகப்படியான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். சரியான கண்ட்ராக்டர்கள், நிறுவனம் என்ற பெயரில் இல்லாமல் உதிரியாக, ஏராளமான பேர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு கொடுப்பதற்கு நமது அமைச்சர் அந்த அமைச்சர்கள் மாநாட்டில் எப்படி எடுத்துக் கூறினார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அமைச்சர்களும் கூடித்தான் இந்த முடிவுக்கு வந்து இருக்கிறது. முதன்முதலாக இப்போது தான் கட்டிடத் தொழிலாளர்களுக்கு சட்டம் வர இருக்கிறது. மத்திய அரசே அதைக்கொண்டு வருவதாகக் கூறியிருக்கிறது. அந்தச் சட்டம் முதலில் வரட்டும். அதைப் பார்த்த பிறகு, அதிலே ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், மத்திய அரசையே திருத்தம் செய்யச் சொல்லலாம். அல்லது நாமே கூட மத்திய அரசின் ஒப்புதல் பெற்று திருத்தம் செய்யலாம். இவ்வளவு நாள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருந்த அந்தத் தொழிலாளர்களுக்குச் சட்டம் வருவதை வரவேற்போம். பிறகு தேவைப்பட்டால் அதற்கு மாற்றங்கள் செய்துகொள்ளலாம். இந்தியன் கான்ஸ்டிடியூஷன் எத்தனையோ முறை மாற்றங்கள் செய்யப்பட்டு இருக்கிறது. இதற்கும் செய்துகொள்ளலாம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சட்டம் வரட்டும் என்று சொல்கிறார்கள். அந்தச் சட்டம் வருகிறபோது சிறு பகுதி தொழிலாளர்களுக்குத்தான் பாதுகாப்புக் கொடுக்கும். பெரும்பகுதியாக உள்ள உதிரியாக இருக்கும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்காது என்று எடுத்துக் காட்டினேன். மாண்புமிகு அமைச்சர் தந்துள்ள அறிக்கையின் இரண்டாவது பக்கத்திலே 4-வது பாராவில் கட்டிடத் தொழிலாளர்கள்—பெண் தொழிலாளர்கள் — வேலை நேரம் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று சொல்லி, 13 மணி நேரம் வேலை என்ற அளவிற்கு கட்டுப்படுத்தலாம் என்று ஒரு ஆலோசனை உருவாக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்திலாவது பெண் தொழிலாளர்கள் இப்படி அதிகமான அளவிற்கு வேலை வாங்குவது சரியாக இருக்குமா ? இதைப்

[1981 ஏப்ரல் 22

பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் என்ன ஆலோசனை கூறினார், அது குறித்து எந்த வகையில் விவாதம் நடந்தது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாநாட்டில் 22, 23 அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசினோம். அதை அத்தனையும் இவ்வளவு நாள் கழித்து ஞாபகம் இருக்கும் என்று உறுப்பினர் எதிர்பார்க்க மாட்டார் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரப்போகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சியின் சார்பாக பாராளுமன்றத்தில், சிறந்த வகையில் பணியாற்றக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே அந்தச் சட்டத்தை மத்திய அரசு அங்கே அறிமுகம் செய்கிறபோதும், விவாதிக்கிறபோதும் இவைகளைப் பற்றி எல்லாம் பேசி, தக்க மாற்றங்களைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சியை மேற்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, அவர்கள் அறிக்கை வைத்து இருக்கிறார்கள். அதனால் விவரம் கேட்டேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நிச்சயமாக இதற்காகப் போராடுவார்கள், விவாதிப்பார்கள். இங்கே பிரச்னை என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். பெண்களுக்கு 13 மணி நேரம் வேலை கொடுக்கலாம் என்பதைக் குறித்து அவர்கள் என்ன கருத்து தெரிவித்தார்கள், என்பதை இங்கே அறிவித்தால் எங்களுடைய மனதுக்குச் சந்தோஷமாக இருக்கும், அதை அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்த அரசின் சார்பில் பல்வேறு திருத்தங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் இந்த அரசின் சார்பாக கொடுக்கப்பட்ட தீர்மானங்கள், விளக்கங்களையும் இங்கே தெரிவிக்கலாம். முதலில் அந்தச் சட்டம் வரட்டும். பின்னர் மற்றவைகளைப் பார்த்துக் கொள்ளலாம். நேற்றைய தினம் பேசுகிற போது கூட எல்லா உறுப்பினர்களும் கட்டடத் தொழிலாளர்களுக்கு சட்டம் வேண்டும் என்று ஏகோபித்த முறையில் சொன்னார்கள். எனவே, மத்திய சட்டம் வரட்டும். இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வருவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனவே சட்டம் வந்த பிறகு பார்க்கலாம். நீங்கள் வேண்டும் என்று கேட்டால் நம் அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்த ஆலோசனைகளை கருத்துக்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 22]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டம் வரட்டும் என்று சொன்னார்கள்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கற்பனைக் குறிப்புகள் பேசுவது நல்லதல்ல. கற்பனைக் குறிப்புகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி : சரி, நேரடியாகக் கேள்விக்கு வந்து விடுகிறேன். பெண்களை காலை 6 முதல் மாலை 7 மணி வரை வேலை வாங்கலாம் என்கிற முறையில் மத்திய அரசு சட்டம் கொண்டு வர இருப்பதாகச் சொன்னார்கள். பெண்கள் மீது எவ்வளவு காருண்யம் அற்ற முறையில் இந்தக் குறிப்பு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். லட்சக்கணக்கான கட்டிடத் தொழிலாளர்கள் மிகவும் அல்ல நிலையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, சட்டம் வருகிறபோது முறையாக அது வரவேண்டும் என்பது நமது அவா. அதிலே குறைபாடு இருந்தால் நமது தமிழக அரசே வேறு சட்டத்தைக்கொண்டு வர முன்வருமா ?

[முற்பகல் 10·00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் மிக வருத்தத்தோடு சொல்கிறேன். இந்தக் குறிப்பு தமிழிலேதான் இருக்கிறது. இதனுடைய பொருள் மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளும் பொருள் அல்ல. காலை 6 மணிக்கு முன்னதாக 5 மணிக்கு பெண்களை வேலைக்கு கூப்பிடக்கூடாது, இரவு 7 மணிக்கு பின்னாலும் கூப்பிடக்கூடாது என்பதுதான் அதனுடைய 'இம்பிளைடு மீனிங்'. அதுதான் அர்த்தம். விவர அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ''15 வயதுக்குக் குறைவான குழந்தைகளைக் கட்டுமானப் பணிகளுக்கு அமர்த்துவதைத் தடுப்பது, பெண் தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தைக் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை என்று கட்டுப்படுத்துதல்'' என்று இருக்கிறது. காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரையில் என்றால் 13 மணி நேரம் என்று பொருள் அல்ல. impl ed me r rg காலை 6 மணிக்கு முன்னதாகக் கூப்பிடக் கூடாது; மாலை 7 மணிக்குப் பின்னால் இரவில் கூப்பிடக் கூடாது என்பதுதான் இதனுடைய பொருள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா விடை நேரம் முடிவுற்றது. இன்றைய வினாப் பட்டியலில் கண்டுள்ள மற்ற வினாக்களும் இவற்றுக்கான விடைகளும் நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பெறும்.

இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 843: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

விடை—

(அ) இரகசிய வாக்கெடுப்பு மூலம் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இப்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

முத்துக்குமாரபுரம் அருகில் புதிய அணை மற்றும் கண்மாயும் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 844—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விளாத்திக்குளம் ஒன்றியம் முத்துக்குமாரபுரம் அருகே புதிய அணையும் குளமும் அமைக்க அரசே நடவடிக்கை எடுத்தும் அரசு ஒப்புதல் அளிக்கவில்லையே ஏன் ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் குறித்து 1979-ல் தொடக்க ஆய்வு நடத்தப்பட்டது. ஆனால் கண்மாயில் சேமித்து வைக்கக்கூடிய